நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**நெல் மூட்டைக்கு ரூ.20 பிடித்தம்: விவசாயிகள் கவலை**

First Published : 05 Feb 2011 09:41:22 AM IST

சிதம்பரம், பிப். 4: நெல் கொள்முதல் நிலையங்களில் மூட்டைக்கு ரூ.20 பிடித்தம் செய்வதால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் சுமார் 1.50 லட்சம் ஏக்கரில் சம்பா பயிர் நடவு செய்யப்பட்டு சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கி தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

அரசு சார்பில் மாவட்ட நிர்வாகம் நெல் கொள்முதல் நிலையங்களை திறந்துள்ளது. விவசாயிகள் வெள்ளத்தில் பயிர்கள் பாழாகி கொஞ்சம் நஞ்சம் நெல்லை அறுவடை செய்து நெல்லை கொள்முதல் நிலையங்களில் விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர்.

கொள்முதல் நிலையங்களில் 40 கிலோ மூட்டைக்கு ரூ.440-க்கு ரூ.20 பிடித்தம் செய்யப்படுகிறது என விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். ஏற்கெனவே வெள்ளத்தினால் பாதிப்பு, ஆள்பற்றாக்குறை, வேளாண் இடுபொருள்களின் விலையேற்றம், போதிய விலை இல்லாதது உள்ளிட்டவைகளால் அவதியுறும் விவசாயிகள் தற்போது ரூ.20 பிடித்தம் செய்வது மேலும் கவலையளிக்கிறது என விவசாயிகள் தெரிவித்தனர்.

எனவே மாவட்ட நிர்வாகம் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் நெல் பிடித்தம் செய்வதை தடுத்து நிறுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினமலர்

**கரும்பு வெட்ட தொடர் அனுமதி கரும்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,00:07 IST

திட்டக்குடி : பெண்ணாடம் அடுத்த இறையூர் சர்க்கரை ஆலை முன்பாக கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இறையூர் கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். மாணிக்கவேல், செயலர் ராஜா முன்னிலை வகித்தனர். மாநில துணைத் தலைவர் காமராஜ், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ராமச்சந்திரன் பேசினர். போராட்டத்தில் கரும்பு டன் ஒன்றுக்கு 3000 ரூபாய் வழங்க வேண்டும். முத்தரப்பு கூட்டத்தை உடனடியாக கூட்டி, வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும். நிர்வாகம் அறிவித்த மீதமுள்ள மானிய தொகையை உடனே வழங்க வேண்டும். பெண்ணாடம், இறையூர், ஆவினங்குடி, முருகன்குடி பகுதிகளில் தொடர்ச்சியாக கரும்பு வெட்ட அனுமதிக்க வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**கரும்பு வெட்டும் இயந்திரம் பற்றாக்குறை விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,00:13 IST

நெல்லிக்குப்பம் : கரும்பு வெட்டுவதற்கு போதுமான இயந்திரம் இல்லாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைக்கு அனுப்புவதற்காக அதிகளவில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக அறுவடைக்கு ஆட்கள் பற்றாக்குறை உள்ளதால் கரும்பு பயிரிடும் பரப்பளவும் குறைந்து வருகிறது. ஆனால் அகலக்கால் முறையில் கரும்பு நடவு செய்தால் களை எடுப்பது, அறுவடை செய்வது போன்ற பணிகளை இயந்திரங்கள் மூலம் செய்யலாம் என ஆலை நிர்வாகம் கூறியது. இதனை நம்பி அகலக்கால் முறையில் சொட்டுநீர் பாசனம் அமைத்து பெரும்பாலான விவசாயிகள் அதிகளவிலான ஏக்கரில் கரும்பு பயிரிட்டுள்ளனர்.

ஆலை நிர்வாகத்திடம் உள்ள ஒரே ஒரு இயந்திரம் மூலம் நாள் ஒன்றுக்கு 200 டன் மட்டுமே கரும்பு வெட்ட முடியும். தற்போது பயிரிடப்பட்டுள்ள கரும்புகளை ஒரே இயந்திரத்தை கொண்டு அறுவடை செய்வது என்பது இயலாத காரியம். இதனால் குறிப்பிட்ட காலத்தில் கரும்பு வெட்ட

முடியுமா என்ற கவலையில் விவசாயிகள் உள்ளனர். ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கரும்பு அறுவடை இயந்திரத்தை வாங்க ஆலை நிர்வாகம், தனியாருக்கு வங்கிக் கடன் வசதி செய்து தந்தால் வாங்கத் தயாராக உள்ளனர். ஆலை நிர்வாகம் அதற்கான முயற்சி செய்ய வேண்டும்.

**விழுப்புரத்தில் மலர் கண்காட்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,00:01 IST

விழுப்புரம் : விழுப்புரம் ரம்யா நர்சரி கார்டனில் நடந்த மலர் கண்காட்சியை எஸ்.பி., பகலவன் துவக்கி வைத்தார். விழுப்புரம் கிழக்கு பாண்டி ரோட்டிலுள்ள ரம்யா நர்சரி கார்டனில் 9வது ஆண்டு மலர் கண்காட்சி துவக்க விழா நேற்று நடந்தது. மாவட்ட ஓசோன் பாதுகாப்பு இயக்கத் தலைவர் ராமன் தலைமை தாங்கினார். எஸ்.பி., பகலவன் கண்காட்சியை துவக்கி வைத்தார். மூலிகை நூலை கோலியனூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் வீராசாமி வெளியிட, ஓசோன் இயக்க பொருளாளர் ராசையா பெற்றுக் கொண்டார்.

இக்கண்காட்சியில் பெங்களூரு ரோஜா, உலர்ந்த மல்லி, இனிப்பு கத்தரிக்காய், சிவப்பு வேம்பு, குறுகிய கால காய்ப்பு திறன் உள்ள தென்னங்கன்றுகள் மற்றும் காய்கறி விதைகள் உள்ளிட்ட செடிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த கண்காட்சி வரும் 7ம் தேதி வரை நடக்கிறது. கல்வி அலுவலர் கதிர்வேல் நன்றி கூறினார்.

**கறிவேப்பிலைவிளைச்சல் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,00:03 IST

திருப்பூர்:பனி தாக்கத்தால் கறிவேப்பிலை விளைச்சல் குறைந்து வருகிறது. திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு சந்தைகளில் வரத்து குறைவாக உள்ளதால், கறிவேப்பிலை விலை தொடர்ந்து உச்சத்தில் உள்ளது.உழவர் சந்தைகளில் கிலோவுக்கு 40 ரூபாய், வெளிமார்க்கெட்டில் 50 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மல்லித்தழை மற்றும் புதினா கட்டு இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. அனைத்து காய்கறிகளின் விலைகளும் கணிசமாக குறைந்து வரும் நேரத்தில், கறிவேப்பிலை விலை மட்டும் அதிக விலை நீடித்து வருகிறது. மேட்டுப்பாளையம், காரமடை, அன்னூர் உள்ளிட்ட பகுதிகளில் விளையும் கறிவேப்பிலைகளே அதிகளவில் திருப்பூர் உழவர் சந்தைகளுக்கு வருகின்றன.வடக்கு உழவர் சந்தை நிர்வாகி ராமலிங்கம் கூறியதாவது:வடக்கு உழவர் சந்தைக்கு 300 முதல் 350 கிலோ கறிவேப்பிலையை விவசாயிகள் கொண்டு வருகின்றனர். பனி தாக்கத்தால் இலைகளில் கருப்பு அடித்து விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், வாசனையும், தரமும் மிகவும் குறைவாக உள்ளது. பனி தாக்கம் குறைந்தால் விலை குறைய வாய்ப்புள்ளது, என்றார்.

**நீலகிரியில் வனத் தீயை கட்டுப்படுத்த வனத்துறையினர் நேரடி செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,00:33 IST

ஊட்டி:ஊட்டி தலைகுந்தா பகுதியில் வனத் தீயை கட்டுப்படுத்த நடந்த செயல் விளக்க காட்சிகள் நடத்தப்பட்டன. நீலகிரி வடக்கு வனக்கோட்டத்துக்கு உட்பட பகுதிகளில் வனத்தீ பரவாமல் தடுக்க தேவையான பணிகள் துரிதப்படுத்தப்பட்டு உள்ளது. ஊட்டி தலைகுந்தா பகுதியில் வன அலுவலர் ராம சுப்ரமணியம் தலைமையில் 150க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வனத் தீ தடுப்பு செயல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினர். வனத் தீ ஏற்படுவதை போன்ற தத்ரூப காட்சிகள் இடம் பெற்றன. இதனை காட்டுச்செடிகள் கொண்டு எவ்வாறு கட்டுப்படுத்துவது; எதிர் தீயிட்டு எவ்வாறு நிறுத்துவது போன்ற விளக்கங்கள் நேரடியாக நிகழ்த்தப்பட்டன. இதனை பார்க்க வந்த பொது மக்களுக்கும், "வனத்தீ ஏற்பட்டால் உடனடியாக வனத்துறையிருக்கு தகவல் கொடுக்க வேண்டும்,' என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வனத்தில் செயற்கையாக தீ வைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வன அலுவலர்கள் எச்சரித்துள்ளனர்.கூடலூர்: சில தினங்களுக்கு முன் முதுமலையை ஒட்டிய கர்னாடக பந்திப்பூர் வனப்பகுதியில் ஏற்பட்ட வனத் தீ முதுமலை யிலும் பரவியது. வனத்துறையினர் எதிர் தீ வைத்து அதனை கட்டுப்படுத்தினர். முதுமலை வனப்பகுதியை ஒட்டிய சாலையோரங்களில் வனத்தீ பரவும் நிலையில், முட்புதர்கள் மற்றும் செடிகள் காய்ந்த நிலையில் உள்ளன.இவ்வழியாக செல்லும், சுற்றுலா பயணிகள் மற்றும் வாகன டிரைவர்கள் வீசும் "சிகரெட்', தீ குச்சி ஆகியவற்றால் வனத் தீ ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனை தடுக்கும் வகையில், தொரப்பள்ளி முதல் கக்கனல்லா வரையும், தெப்பக்காடு முதல் மசினகுடி வரையும் சாலையோரத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட தீ தடுப்பு கோடுகளில் காய்ந்த முட்புதர்கள் மற்றும் செடிகளை மிக பாதுகாப்புடன் வனத்துறையினர் தீயிட்டு அழித்து வருகின்றனர். "இதன் மூலம், வெளிநபர்களால் வனத் தீ ஏற்படுவது தடுக்க முடியும்,' என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**ஐசோபாம் எண்ணெய் வித்து வேளாண்மை பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,00:17 IST

குளித்தலை: கரூர் உழவர்பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் மூலம் 2010-11ம் ஆண்டுக்கான ஐசோபாம் எண்ணெய் வித்து விவசாயிகள் பயிற்சி தோகமலை யூனியன் கீழவெளியூரில் நடந்தது. கரூர் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர்

ராதாகிருஷ்ணன் வரவேற்றார். கல்லடை பஞ்சாயத்து தலைவர் ராஜலிங்கம் முன்னிலை வகித்தார். தற்போது செயல்படுத்தப்படும் மத்திய திட்டம், இயற்கை வேளாண்மையில் நவீன தொழில்நுட்பம், விவசாயத்தை ஒரு லாபகரமான தொழிலாக செய்வது குறித்து வேளாண்மை துணை இயக்குனர் சவுந்திரம் விளக்கி பேசினார்.

சிறுகமணி வேளாண்மை அறிவியல் மைய பேராசிரியர் சகுந்தலை, எண்ணெய்வித்து பயிர்க நவீன சாகுபடி முறை குறித்து பேசினார். தோகமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் காதர்மொஹைதீன், வேளாண்மை துறை செயல்படுத்தும் திட்டம் குறித்து விளக்கினார். அலுவலர் கண்ணதாசன் துல்லிய பண்ணைத்திட்டம், பயிர்களுக்கு சொட்டுநீர் தெளிப்பு நீர் பாசன முறை குறித்து பேசினார். இரண்டாம் நாள் முகாமில், கீழவெளியூரில் நிலக்கடலை வயலில் ஜிப்சம் இடுதல் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. நிலக்கடலை தாக்கும் பூச்சி, நோய்கள், அதனை கட்டுப்படுத்தும் முறை குறித்து விளக்கப்பட்டது. தோகமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சிந்தாமணி திட்டங்கள் குறித்து பேசினார். பயிற்சியில் 50 விவசாயிகள் பங்கேற்றனர்.

**காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,00:19 IST

தர்மபுரி: பென்னாகரம் உழவர் சந்தையில் விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி நடந்தது. முன்னோடி விவசாயி இளஞ்செழியன் தலைமை வகித்தார். தை - மாசி பட்டத்தில் சாகுபடி செய்ய வேண்டிய காய்கறி பயிர்கள் குறித்தும், அதற்கான சாகுபடி தொழில் நுட்பங்கள், வேளாண் உதவி அலுவலர் முனியப்பன் விளக்கினார்.
காய்கறிகளில் உள்ள உயிர் சத்து, தாது பொருட்கள் குறித்து நுகர்வோர்களிடம் விழிப்புணர்வு உள்ளதால், காய்கறிகள் அதிக பயன்பாடு உள்ளதால், சாகுபடியை அதிகரித்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இது குறித்த தொழில் நுட்பங்களை தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் முகந்தன் விளக்கினார். அதிக காய்கறிகளை உழவர் சந்தைக்கு விற்பனைக்கு எடுத்து வர வேண்டும் என வேளாண் உதவி அலுவலர் தமிழ்செல்வி கேட்டு கொண்டார். ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர் முனுசாமி செய்திருந்தார்.

**பசுமை உழவர் மன்றம் துவக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,00:38 IST

மேலூர்: மேலூர் அருகில் உள்ள கொங்கம்பட்டியில் பசுமை உழவர் மன்றம் துவக்கப்பட்டது. தலைவராக அய்யணன், செயலராக பாண்டி, பொருளாளராக சரவணன், உப தலைவராக சேகர், துணை செயலராக இருளாண்டி தேர்வு செய்யப்பட்டனர். மதுரை உதவிகரங்கள் தன்னார்வு நிறுவனம் சார்பில், அப்போது விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்கள் பற்றி கூறப்பட்டது. இயற்கை வழி விவசாயம், வேளாண் இடு பொருட்கள், சந்தை படுத்துதல் போன்றவைகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. உதவி கரங்கள் நிர்வாக இயக்குனர் பாலசுப்பிரமணியன் இதை வழங்கினார்.

**தேனி மாவட்டத்தில் தென்னை வாடல் நோய் பரவுகிறது : பாதித்த மரங்களை வெட்டி அகற்ற பரிந்துரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,21:07 IST

தேனி : தேனி மாவட்டத்தில் மீண்டும் தென்னை வாடல் நோய் பரவி வருகிறது. இந்நோய்க்கு சிகிச்சை அளிக்கும் தொழில்நுட்பம் இல்லாததால், பாதிக்கப்பட்ட மரங்களை வெட்டி அகற்ற வேண்டும் என தோட்டக்கலைத்துறை பரிந்துரை செய்துள்ளது.

கேரளாவில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்திய தென்னை வாடல் நோய், மீண்டும் தேனி மாவட்டத்தில் கம்பம், கூடலூர் பகுதிகளில் வேகமாக பரவி வருகிறது. இந்த நோய் பாதித்த தென்னை மரங்களில் விளைச்சல் படிப்படியாக குறைந்து விடும். கீற்றுகள் காய்ந்து விடும். பாதிக்கப்பட்ட மரத்தில் இருந்து, தத்துப்பூச்சிகள் மற்ற மரங்களுக்கு பரவி பாதிப்பை ஏற்படுத்திவிடும். இந்த நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. தோட்டக்கலைத்துறை பரிந்துரை செய்த எல்லா மருத்துவ முறைகளும் தோல்வியில் முடிந்துவிட்டன. பாதிக்கப்பட்ட மரத்தை வெட்டி அகற்றுவது மட்டுமே இப்பிரச்னைக்கு தீர்வாக உள்ளது.

அகற்றாவிட்டால், அடுத்தடுத்து பரவி மற்ற மரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். தற்போது மாவட்டத்தில் 33 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. எனவே இந்த பாதிப்பில் இருந்து மரங்களை காப்பாற்ற, நோய் வாடல்நோய் பாதித்த மரங்களை அகற்றி விட்டு, வேறு புதிய கன்றுகள் நட வேண்டும். அல்லது மாற்று விவசாயத்திற்கு மாற வேண்டும் என தோட்டக்கலைத்துறை விவசாயிகளுக்கு அறிவுறுத்தி உள்ளது.

**தோட்டக்கலை கல்லூரியில் இயற்கை சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 05,2011,21:08 IST

தேனி : பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரியில் இயற்கை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இக்கல்லூரியின் சமூகவியல்துறை சார்பில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு நூறு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. சமூகவியல்துறை தலைவர் ரத்தினசாமி, உதவிப்பேராசிரியர்கள் ராமலட்சுமி, சிபி செபாஸ்டின் பயிற்சியளிக்கின்றனர்.

இயற்கை உரங்கள், மண் புழு உரம், தென்னை நார்க்கழிவில் இருந்து உரம், தொழு உரம், கம்போஸ்ட் உரம், பசுந்தாள்உரம், நுண்ணுயிர் உரங்கள் தயாரித்தல் மற்றும் முறையான பயன்பாடு குறித்து பயிற்சிகள் வழங்கப்படுகிறது. துல்லிய பண்ணை திட்டத்தில் 1240 விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம், சொட்டுநீர் உரபாசனம், பாசன கருவிகள் பராமரிப்பு உட்பட பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

**தோடக்கலைக்கல்லூரியில் "பாலி ஹவுஸ்'அமைத்து குடைமிளகாய் சாகுபடி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,23:06 IST

தேனி:தேனி மாவட்டம் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரியில், "பாலிஹவுஸ்' அமைத்து, குடைமிளகாய் விளைவிக்கப்பட்டுள்ளது. இந்த தொழில்நுட்பத்தை விவசாயிகள் அறிந்து கொண்டு, அரசு மானிய உதவியுடன், பயிர்செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தோட்டக்கலை கல்லூரி காய்கறி, பழவியல் துறை சார்பில் 500 சதுர மீட்டரில் "பாலிஹவுஸ்' அமைக்கப்பட்டு, குடைமிளகாய் விளைவிக்கப்படுகிறது. வைட்டமின் சி, அதிகளவு மினரல்ஸ், நார்ச்சத்துக்களை உள்ளடக்கிய இந்த மிளகாயில் காரத்தன்மை மிகவும் குறைவு. இதை பச்சையாக சாப்பிடலாம். காய்கறி சாலட் தயாரிக்கவும், பல்வேறு வகை சமையல்களுக்கும் பயன்படும். ஒரு கிலோ 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 500 சதுர மீட்டரில் ஒன்றரை டன் விளையும். ஆறு மாதத்திற்குள் மகசூல் எடுக்கலாம்.ஒரு முறை "பாலிஹவுஸ்' அமைத்தால் 10 ஆண்டுகளுக்கு தொடர்ந்து பயன்படுத்தலாம். சொட்டுநீர் பாசனமே போதுமானது.பேராசிரியர் சுவாமிநாதன் கூறியதாவது:தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் "பாலி ஹவுஸ்' அமைக்கவும், சொட்டுநீர் பாசனம் அமைக்கவும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

நாங்கள் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்க தயாராக இருக்கிறோம்.இதை தமிழகத்தில் எங்கு வேண்டுமானாலும், சாகுபடி செய்யலாம். பயிற்சி பெற்ற விவசாயிகளால் மட்டுமே குடமிளகாயை விளைவிக்க முடியும், என்றார்.

**விவசாயிகள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,23:42 IST

பொள்ளாச்சி:பொள்ளாச்சி சப்-கலெக்டர் அலுவலகத்தில் வரும் 11ம் தேதி நடக்கும் விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.பொள்ளாச்சி வருவாய் கோட்டாட்சியர் அழகிரிசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:பொள்ளாச்சி வருவாய் கோட்டத்தில் ஒவ்வொரு மாதமும் விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டம் நடத்தப்பட்டு, விவசாயிகளின் பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு ஏற்படுத்தப்படுகிறது. பிப்ரவரி மாதத்திற்கான விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டம் வரும் 11ம் தேதி சப்-கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கூட்டத்தில் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொள்வதால் விவசாயிகள் பொதுப்பிரச்னை, விவசாய பிரச்னைகளை மனுக்களாக எழுதிக்கொடுத்து தீர்வு காணலாம் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**துல்லிய பண்ணையம் திட்டத்தில் காய்கறி மகசூல் அதிகரிப்பு;பந்தல் காய்கறி சாகுபடி விவசாயிகள் நம்பிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 04,2011,23:42 IST

பொள்ளாச்சி:துல்லிய பண்ணையம் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப முறைகளை கையாண்டு காய்கறி பயிர்கள் சாகுபடி செய்வதில் ஹெக்டருக்கு 15 டன் காய்கறி மகசூல் அதிகரித்துள்ளது என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.பொள்ளாச்சி அடுத்த நஞ்சேகவுண்டன்புதூரில் விவசாயி அகத்தீஸ்வரன் தோட்டத்தில் காய்கறி பயிர்களில் துல்லிய பண்ணையம் திட்டத்தில் பீர்க்கன் காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அறுவடை துவங்கியுள்ள நிலையில், ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையம் சார்பில் நேற்று வயல்வெளி விழா நடந்தது. தென்னை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சீனிவாசன் வரவேற்றார்.தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ராஜமாணிக்கம், துல்லிய பண்ணைய திட்டத்தில் தொழில்நுட்பத்தை கையாள்வது குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜமாணிக்கம் பேசியதாவது:துல்லிய பண்ணையம் திட்டத்தில் தொழில்நுட்ப முறைகளை

கையாள்வது காய்கறி பயிர்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பந்தல் காய்கறி சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டருக்கு விதை, திரவ இடுபொருட்கள், திரவ உரம் மற்றும் பூச்சி மருந்துகள் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. இதற்காக ஒரு ஹெக்டருக்கு 90 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் மானியத்தில் வழங்கப்படுகிறது.ஆழியாறு வடிநிலத்தில் நீர்வள நிலவள திட்டத்தில் பீர்க்கன்காய், புடலை, பாவற்காய் போன்ற பந்தல் காய்கறி சாகுபடி பயிர்களுக்கு துல்லிய பண்ணையம் திட்டத்தில் நவீன தொழில்நுட்பங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன்மூலம் இடுபொருள், உரம், பூச்சி மருந்து, தண்ணீர் வீணாவது தவிர்க்கப்படுகிறது. அதிக மகசூல் கிடைக்கிறது.

அதனால் விவசாயிகள் அனைவரும் இந்த தொழில்நுட்ப முறைகளை கையாள வேண்டும்.பொள்ளாச்சி தாலுகாவில் குறிப்பாக ஆழியாறு வடிநிலத்தில் பந்தல் காய்கறி சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது. தென்னை விவசாயத்தை மட்டுமே நம்பியிருந்த விவசாயிகள் ஊடுபயிராக காய்கறி சாகுபடியில் ஈடுபட்டுள்ளது வரவேற்கத்தக்கது. தென்னையை போன்றே சொட்டு நீர் பாசன முறையில் பந்தல் காய்கறி சாகுபடி செய்யும் போது தரமான, காய்கறி உற்பத்தி செய்யப்படுகிறது. தென்னையில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் இழப்பை, காய்கறி சாகுபடி மூலம் ஈடுகட்டலாம். அதனால், காய்கறி சாகுபடியில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும்.இவ்வாறு, தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜமாணிக்கம் பேசினார்.காய்கறி சாகுபடி விவசாயி அகத்தீஸ்வரன் பேசியதாவது: துல்லிய பண்ணையம் திட்டத்தில் சொட்டு நீர் பாசனத்தில் காய்கறி சாகுபடி செய்யும் போது, தண்ணீர் சிக்கனமாக பயன்படுத்தப்படுகிறது. இதனால் களைகள் குறைகிறது.

மேலும், உரம், பூச்சி மருந்துகள் திரவமாக சொட்டு நீர் முறையில் செடிகளுக்கு கொடுப்பதால் விரயமாவதும் குறைகிறது.பொள்ளாச்சி பகுதியில் பீர்க்கன், புடலை, பாவற்காய் சாகுபடி விவசாயிகள் துல்லிய பண்ணையம் திட்டத்தில் நவீன முறைகளை கையாள்கின்றனர். துல்லிய பண்ணையம் திட்டத்தால் செடிகளுக்கு ஏற்படும் நோய் உடனுக்குடன் கட்டுப்படுத்தப்பட்டு, அதிக மகசூல் கிடைக்கிறது. பீர்க்கான் சாகுபடி செய்த 40 நாட்களில் இருந்து காய் அறுவடை துவங்குகிறது. செடிகள் 100 முதல் 120 நாட்கள் ஆயுள் கொண்டது. அதில், 40 நாட்களுக்கு பிறகு 60 முதல் 80 நாட்களில் சுமார் 40 முறை காய் பறிக்கப்படுகிறது. ஒரு ஹெக்டரில் 30 டன் காய் அறுவடை செய்யப்பட்டது. துல்லிய பண்ணையம் திட்டத்திற்கு மாறியதால் தற்போது ஒரு ஹெக்டரில் 45 டன் காய் அறுவடை செய்யப்படுகிறது. வியாபாரிகளே நேரடியாக தோட்டத்திற்கு வந்து விலை நிர்ணயம் செய்து காயை கொள்முதல் செய்து கொள்கின்றனர் என்றார்.ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய முதுநிலை ஆராய்ச்சியாளர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

மாலை மலர் BETA

**கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி 7-ந்தேதி பால் உற்பத்தியாளர்கள் மாடுகளுடன் போராட்டம்**

Chennai சனிக்கிழமை, பெப்ரவரி 05, 3:48 PM IST



சென்னை, பிப். 5-

கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி பால் உற்பத்தியாளர்கள் மாடுகளுடன் 7-ந்தேதி போராட்டத்தில் ஈடுபட உள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 8 ஆயிரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 60 லட்சம் உறுப்பினர்கள் பால் உற்பத்தி செய்து கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குகிறார்கள்.

இந்த சங்கங்களிடம் இருந்து ஆவின் பாலை கொள்முதல் செய்து பதப்படுத்தி பொது மக்களுக்கு வினியோகம் செய்கிறது. பால் கொள்முதல் விலை தற்போது பசும்பால் லிட்டர் ரூ.15.54, எருமைப்பால் ரூ.23, ஆக உள்ளது. தனியார் கொள்முதல் விலை இதை விட 2 ரூபாய் கூடுதலாக உள்ளது. பசும்பால் லிட்டருக்கு ரூ.5-ம், எருமைப்பால் லிட்டருக்கு ரூ.8-ம் உயர்த்தி கொள்முதல் செய்ய வேண்டும் என்று பால் உற்பத்தியாளர்கள் சார்பில் அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி 7-ந்தேதி (திங்கட்கிழமை) பால் நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவதாக பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கம், விவசாயிகள் நலச்சங்கம்


உள்ளிட்ட பல்வேறு சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றன. போராட்டம் குறித்து பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க மாநில தலைவர் செங்கோட்டுவேல் கூறியதாவது:-

பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும், பால் கூட்டுறவு சங்கங்களில் 24 ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களில் பலர் 30 வருடமாக வேலை செய்கிறார்கள். பணி நிரந்தரம், ஊதிய உயர்வு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு, பணி நிரந்தரம், ஒய்வூதிய பலன்கள் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் நடத்தப்படுகிறது.

தினமும் 17 லட்சம் லிட்டர் பால் ஆவினுக்கு வழங்கப்படுகிறது. 7-ந்தேதி சங்கங்களுக்கு பால் வழங்காமல் நிறுத்த முடிவு செய்துள்ளோம். அன்று உற்பத்தி செய்யும் பாலை சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்துவோம். தயிருக்கு பயன்படுத்தி அதில் இருந்து வெண்ணை எடுத்து விடுவோம். மோரை மாட்டு தீவனத்தில் பயன்படுத்த முடிவு செய்துள்ளோம். அதையும் மீறி பாலை கொள்முதல் செய்யும் பணயில் அரசு ஈடுபட்டால் பால் வாகனத்தின் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம். மாடுகளுடன் போராட்டத்தில் இறங்குவோம். எங்களை கைது செய்தால் மாடுகளுடன் தான் சிறை செல்வோம்.இவ்வாறு அவர் கூறினார்.

**முல்லை பெரியாரில் புதிய அணை: கேரளாவுக்கு தமிழக அரசு கண்டனம்**

Chennai சனிக்கிழமை, பெப்ரவரி 05, 3:38 PM IST



சென்னை, பிப்.5-

சட்டசபையில் இன்று அமைச்சர் அன்பழகன் பேசும்போது கூறியதாவது:-

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் கேரள அரசு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாகவும், அண்டை மாநில உறவு நிலைகளைப் பாதிக்கக்கூடிய வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அதன் ஒரு கட்டமாக, தற்போது கேரள சட்டப் பேரவையில் ஆளுநர் உரையில் ““முல்லைப் பெரியாரில் இந்த ஆண்டே புதிய அணை கட்டும் பணி தொடங்கும்”” என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் உச்சநீதிமன்றம் 27.2.2006 அன்று அளித்த தீர்ப்பினை செயல்படுத்த இயலாத வகையில், கேரள அரசு அதன் நீர்ப்பாசன மற்றும் பாதுகாப்புச் சட்டம், 2003-ல் திருத்தங்களை மார்ச்சு, 2006-ல் மேற்கொண்டுள்ளதை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் சிவில் வழக்கைத் தொடர்ந்துள்ளது. அந்த வழக்கு இன்னும் உச்சநீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வருகிறது.

உச்சநீதிமன்றம் தனது 18.2.2010 நாளிட்ட ஆணையில், முல்லைப் பெரியாறு தொடர்புடைய இனங்களை ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டாக்டர் ஏ.எஸ்.ஆனந்த் அவர்கள் தலைமையில் ஓர் அதிகார மளிக்கப்பட்ட குழுவினை அமைத்துள்ளது. அந்தக் குழுவில் தமிழக, கேரள மாநிலங்களைச் சார்ந்த ஓய்வுபெற்ற நீதியரசர்கள் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளார்கள். மத்திய அரசின் நிபுணர்களும் பங்கு பெற்றுள்ளார்கள். இந்தக் குழு 21.12.2010 அன்று முல்லைப் பெரியாறு அணையை பார்வையிட்டுச் சென்றுள்ளது.

இவ்வாறு இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போதே, முல்லைப் பெரியாரில் புதிய அணை கட்டும் பணி இந்த ஆண்டே தொடங்கும் - என்று கேரள அரசு தெரிவித்திருப்பது உச்சநீதிமன்றத்தை மதிக்காத செயலாகும். இச்செயல் மிகவும் கண்டிக்கத்தக்க தாகும். மேலும், இரு மாநில உறவுகளுக்கும் ஊறு விளை விக்கக்கூடிய வகையில் இனிமேலாவது கேரள அரசு செயல்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசை தமிழக அரசு மீண்டும் வலியுறுத்தும்.

இது சம்பந்தமாக உரிய தருணத்தில் உச்சநீதிமன்றத்தின் முன்னும் எடுத்துரைக்கப்படும்.
இவ்வாறு அவர் பேசினார்.